**மகர பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 22 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மகர பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிராம அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இரு வேலைத்திட்டங்களுக்கு சென்மதியாளர் ஒதுக்கம் மேற்கொள்ளும் போது ரூபா 563,700 குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2014 இல் கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையில் காட்டப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள் 2015 ஆம் ஆண்டு நிதிகூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்தம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த உழவு இயந்திர பெட்டி பதிவு செய்யும் போது செலுத்திய பதிவுக்கட்டணம் ரூபா 42,000 பெறுமதியான தொகையை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான 19 காணித் துண்டுகளுக்கான பெறுமதியை மதிப்பீடு செய்து நிதி கூற்றிற்கு எடுப்பதற்கும் மற்றும் நிதி சொத்து பதிவேட்டுக்கு பதிவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கன்தலியத்த பாலுவ பொல்கேன மின்சார பிரோதம் எரியூட்டும் இடம் கட்டுதல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கணக்கீடு செய்யும் போது அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்ததாரருக்கு கொடுக்கவேண்டிய ரூபா 3,514,777 பெறுமதிக்கு பதிலாக மீளாய்வாண்டில் சென்மதியாளர் கணக்கிற்கு ரூபா 6,500,000 ஒதுக்கிவைத்தமையால் சென்மதியாளர் ரூபா 2,985,223 தொகை அதிகமாக காட்டப்பட்டுள்ளது.

(ii) மீளாய்வாண்டில் பொல்கேன மின்சார பிரேதம் எரியூட்டும் இடம் கட்டுவதற்கு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியில்

ரூபா 7,170,000 பெறுமதியான கடன் கிடைத்த போதும் இக் கடன் நீண்ட கால பொறுப்புக்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பொல்கேன மின்சார பிரேதம் எரியூட்டும் இடம் கட்டுவதற்கு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியில் கிடைத்த ரூபா 7,170,000 மற்றும் ரூபா 6,500,000 பெறுமதியான மீதி மதிப்பீடு ஆகியவற்றின் கூட்டுமொத்த தொகை ரூபா. 13,670,000 வருமானக் கூற்றில் சுகாதார சேவை வருமான தலைப்பின் கீழ் மூலதன சொத்து விற்ற வருமானமாக செலவு வைக்கப்பட்டிருந்தது.

(iv) பொல்கேன மின்சார பிரேதம் எரியூட்டும் இடம் கட்டுவதற்காக ரூபா 6,500,000 கிடைக்கவேண்டிய தொகை கிடைக்கவேண்டிய நிலுவைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கடன் கணக்கில் செலவு வைத்திருந்ததனால் இரு கணக்குகளிலும் அந்த பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிக்கு 2015 யூன், யூலை மாதத்திற்காக செலுத்திய ரூபா 29,050 வட்டி கணக்கீட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மேல் மாகாண உள்;ராட்சி ஆணையாளர் திணைக்களத்தினால் சம்பள மீள் நிரப்பல் முறையை போல வழங்கப்பட்ட கப் வாகனம் எடுப்பதற்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,059,409 வாகனக் கணக்குக்கு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆகிய வருடங்களுக்கான சொந்தமான தளபாடப் பொருத்துக்களின் பெறுமதி முறையே ரூபா 613,404 ,ரூபா 36,964 ,ரூபா 113,805 , மற்றும் ரூபா 48,220 ஆகிய கூட்டு மொத்த தொகை ரூபா 812,393 தளபாட பொருத்துகள் கணக்கிற்கு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு பகல கரககமுண உப அலுவலகத்தில் ரூபா 56,255 பெறுமதியான தளபாடப் பொருத்துக்கள் கணக்கீட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டில் 3 உப அலுவலகத்திற்கு கொள்வனவு செய்த ரூபா 1,479,938 பெறுமதியான நூலக புத்தகங்கள் மகர உப அலுவலகத்தில் மட்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) ஊழியர் சேமலாப நிதியம் சம்மந்தமாக ரூபா 57,415 மேலதிக கட்டணம் விதிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் ரூபா 19,956 செலுத்தப்பட்டது. கொடுக்க வேண்டிய மிகுதி ரூபா 37,459 பணம் சென்மதியாளர் கணக்கில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கானசான்றுகள் இன்மை

ஒட்டுமொத்த தொகையான ரூபா 35,160,810 பெறுமதியான நடவடிக்கைகளுக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

### 1.3.3 வங்கி கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாதகூட்டு மொத்த தொகை ரூபா 1,064,463 பெறுமதியான 117 எண்ணிக்கையான காசோலைகள் பற்றி நிதிப் பிரமாணம் இல 396(ஈ) இன் பிரகாரம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டில் வங்கிக்கு நேரடி வைப்பாக கிடைத்த ரூபா 253,302 பெறுமதியான தொகை இனங்காணங்காணப்படாது அவ் மீதிகள் வங்கி இணக்கக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) கூட்டு மொத்த தொகை ரூபா 16,178 பெறுமதியான 3 மீதிகள் வங்கிஇணக்க கூற்றில் தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ச்சியாக கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 26,336 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலை பற்றி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 17,194,642 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 41,650,401 விளைந்திருந்தது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

மகர பிரதேச சபையின் உறுப்பினர்களின் ஆட்சி காலப்பகுதி 2015 மே 15 ஆந் திகதியில் இருந்து முடிவடைந்துள்ளன. அத்திகதியில் இருந்து சபையின் அதிகாரம் செய்வதற்கு நல்ல நிர்வாகம் சபைக்குள் செய்ய வேண்டுமென 2015 மே 22 ஆந் திகதி மேல் மாகாண உள்;ராட்சி ஆணையாரின் எல்ஜிடி/05/02/03 ஆகிய கடிதத்தின் மூலம் செயலாளருக்கு அறிவித்திருந்தது. ஆனாலும் கொடுப்பனவு செய்வதற்கு கொடுப்பனவு அதிகாரமளித்தல், கொடுப்பனவு அங்கீகாரமளித்தல், கொடுப்பனவு சான்றுப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக நல்ல ஒரு முறைமையை நடைமுறைப்படுத்த பொருத்தமான நிர்வாக கட்டமைப்பை சபைக்குள் செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 மே மாதத்தில் இருந்து சபையில் மொத்த செலவு சம்மந்தமாக கொடுப்பனவு அனுமதித்தல், சான்றுப்படுத்தல் செயற்பாடு நிதி ஒழுங்குவிதி இலக்கம் 135-139 வரையானவற்றுக்கு முரணாக சபை செயலாளர் செய்திருந்தார்.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உண்மையான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் பின்வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|
| ஆதனவரி | 4,443 | 5,236 | 7,686 |
| வாடகைகள் | 3,555 | 3,610 | 549 |
| உரிமங்கள் | 1,328 | 1,281 | 468 |
| ஏனைய வருமானங்கள் | 601 | 733 | 6 |

**2.3.2 ஆதனவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊறுவல் பேருவ உபஅலுவலகத்தில் இறுதியாக ஆதனவரிக்காக சொத்துக்கள் 1968 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்திருந்தது. இது 47 வருடங்களுக்கு மேலாக இருந்த போதும் புதிய மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றும் புதிய சொத்துக்களை இனங்கண்டு புதிய ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1968 இல் இருந்து இவ் மீளாய்வாண்டு வரைக்கும் வரி அலகு 140 இற்கு மட்டும் 2015 ஆம் ஆண்டுக்காக ஆதனவரி அறவிட இருந்தமையால் இந்த உபஅலுவலகத்தில் ஆதனவரி வருமானம் மிகக் குறைவாக காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் கட்டட திட்டமிடல் அனுமதி செய்யப்பட்டிருந்த போதும் அதனை அடிப்படையாக கொண்டு புதிய ஆதனவரி அலகுகளை இனங்காண எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய ரூபா 7,396,886 ஆதனவரி நிலுவையில் 10 வருடத்திற்கு மேலாக ரூபா 3,045,803, 5-10 வருடத்திற்கு உட்பட்ட ரூபா 2,048,070 உம், 1-5 வருடத்திற்கு உட்பட்ட ரூபா 1,895,821 உம் அறவிடவேண்டியுள்ளது. இங்கு கிடைக்கவேண்டிய ஆதனவரி அறவிட 1987 இலக்கம் 15 பிரதேச சபை சட்டத்தின் அதிகாரப்படி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசம் முன்னேறிய பிரதேசதமாக பெயரிடப்பட்டுள்ள போதும், தீர்வை வரிகள் கூறில் முன்னேற்றம் தென்படவில்லை.

**2.3.3 உரிமங்கள்**

வருமான கட்டுப்பாட்டாளர் கொடுத்த காலப்பகுதி பகுப்பாய்வின் படி கிடைக்கவேண்டிய உரிமங்கள் நிலுவை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி 10 வருடத்துக்கு மேலாக ரூபா 15,220 உம் 1-5 காலப்பகுதிக்கு ரூபா 311,870 உம் கிடைக்கவேண்டி இருந்த போதிலும் அது அறவிடப்பட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம்**

சபை எல்லைக்குள் தொலைத்தொடர்பு கோபுரம் பற்றி ஆராட்சி நடாத்தி இனங்காணப்பட்டு 2009 ஏப்ரல் 17 ஆந் திகதி இலக்க 1597/8 விசேட வர்த்தகமானியை அடிப்படையாக கொண்டு உபசட்டத்தை உருவாக்கி கட்டணம் அறவிட சபையினால் போதுமான அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் 15 தொலைத்தொடர்பு கோபுரம் இனங்காணப்பட்ட போதும் அதில் இருந்து கட்டணம் அறவிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

குப்பைகள் எடுப்பது தொடர்பாக சுகாதார மேற்பார்வையாளர் கண்காணிப்பு செய்ய வேண்டிய போதும் அக் கண்காணிப்பினை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களையும் எடுத்தமையால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 72,000 மோட்டார்வண்டி எரிபொருள் செலவும், ரூபா 80,064 மேலதிக நேர கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தது. குப்பைகள் சேகரித்து பொருத்தமான இடத்தில் போடுவது தொடர்பான கண்காணிப்பு சுகாதார மேற்பார்வையாளரின் வேலையாக இருந்தபோதும் சபையில் ஆட்கள் நியமித்து

இதனை செய்வது தொடர்பான அவசியம் இல்லாமையால் இச் செலவு சிக்கனமற்ற செலவாக காணப்படுகிறது.

## 3.2 முறைகேடான கொடுக்கல் வாங்கல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டத்திற்காக மேலதிக கடமை செய்வதற்காக கிடைத்த ரூபா 822,671 நிர்வாக செலவில் சபை செயலாளருக்கும் ஏனைய 45 அலுவலர்களும் ரூபா 803,000 கொடுக்கப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவில் விடுமுறை வேலை செய்வதற்கு அனுமதி கடிதமும், நிர்வாக செலவு எவ்வாறு கணக்கீடு செய்தது பற்றிய தகவலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக் கொடுப்பனவு சம்மந்தமாக வேலை செய்யும் அலுவலர்களின் மாதிரி எடுத்து அவர்களின் வரவு அறிக்கையை அவதானித்த போது அவர்களின் மேலதிகக் கடமைசெய்தமைக்கான மணித்தியாலம் 245.45 காணப்பட்ட போதும்

அதற்காக ரூபா 28,661 கொடுக்கவேண்டிய போதும் ரூபா 324,500 கொடுப்பனவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1996 திசெம்பர் 27 ஆந் திகதி இலக்கம் எல்பி /95/46 ஆகிய மேல் மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கை 4(iii) பந்தியின் பிரகாரம் சபை அலுவலர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட தேவைக்காக எவ்வாறான சந்தர்ப்பங்களிலும் வாகனங்கள் பயன்படுத்த முடியாது என குறிப்பிட்டிருந்த போதும் சபை செயலாளர் சபை வாகனத்தை பயன்படுத்தி அவரது வீட்டில் இருந்து அலுவலகம் வந்து செல்வதற்கு ஒவ்வொருநாளும் 122 கிலோமீற்றர் பாவித்திருந்தார். மாதிரி பரீட்சிப்பு செய்யும் போது 2015 யூலை 08 இல் இருந்து 2015 ஆகஸ்ட் 13 வரை உள்ள வாகன ஓட்ட பதிவேட்டை பார்வையிட்ட போது வீட்டில் இருந்து வந்து செல்ல 3172 கிலோமீற்றர் பாவித்திருந்த போதும் அதற்காக சபை நிதியில் எரிபொருளுக்காக ரூபா 40,782 செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2010 செப்ரெம்பர் 9 ஆந் திகதி இலக்க பிஎல்/எம்/01/05/26 ஆகிய உள்;ராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பதில் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் உள்;ராட்சி திணைக்களத்தின் பிரதான அலுவலர், பிரதி முதன்மை அலுவலர் அல்லது உறுப்பினர்கள் வெளிநாட்டு பயிற்சி திட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தால் பயிற்சியை வழங்கும் நிறுவனம், அல்லது வெளிநாட்டு நிறுவனம், அல்லது நாடுகள் என்பனவே அந்த பயிற்சிசெலவை செய்யவேண்டுமென கடிதத்தில் அறிவித்திருந்தது. அத்துடன் அரசாங்கம் அல்லது மாகாணசபை அல்லது உள்;ராட்சி நிறுவனங்கள் காசு கொடுக்கமுடியாதென அறிவித்திருந்தது. அந்த அறிவுறுத்தல்களுக்கு எதிராக சபையால் இலங்கை உள்;ராட்சி நலச்சேவை ஒழுங்குபடுத்திய வியட்நாம் நாட்டில் நடைபெற்ற உள்;ராட்சி நிறுவனம் பற்றிய அவதானிப்புக்கும் பயிற்சிக்கும் பங்கேற்பதற்காக ஒரு உறுப்பினருக்கு ரூபா 160,000 கொடுப்பனவு செய்திருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது பயன்பாட்டுக்காக ஒதுக்கிவைத்த 3 காணித்துண்டுகளுக்கு சொந்தமாக கூட்டு மொத்தம் 2 றூட் 8.18 பேச்சஸ் காணி உரிமைப் பத்திரங்கள் கணக்கீட்டுத்

திகதி 2016 மே 02 வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் உரிமைப்பத்திரங்கள் இல்லாமையினால் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊருவல்பேருவ உப அலுவலகத்திற்கு சொந்தமான 5 நூலகங்களில் கேனேகம விலிபுல மற்றும் நீலமகர ஆகிய நூலகங்களிற்கு மீளாய்வாண்டில் ரூபா 349,938 புத்தகங்கள் எடுத்த போதும் இந்த நூலகங்களை பயன்படுத்துவோரை அதிகரிப்பதற்காக சபையினால் அவதானம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 வருடத்தில் இருந்து 2012 வரை 14 அலுவலர்கள் ஓய்வு பெற்றமைக்காக சபை மூலமாக ரூபா 985,649 தற்காலிகமான ஓய்வூதிய சம்பளம் கொடுத்திருந்த போதும் அந்த நிதி ஓய்வூதிய திணைக்களத்தில் தீர்வு செய்வதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபை கணக்கீட்டின் படி ஓய்வூதிய திணைக்கள அதிபதிக்கு ரூபா 41,201 கொடுக்க வேண்டுமென செலவுமீதி காட்டப்பட்டபோதிலும் ஓய்வூதிய திணைக்கள கணக்கீட்டின் நிலுவை ரூபா 245,078 உள்ளது.

(ஈ) ஊருவல்பேருவ உப அலுவலக எல்லைக்குள் உள்ள (1989 கிளர்ச்சி காலப்பகுதியில் எரிக்கப்பட்ட கடைகள் சம்மந்தமாக) சொத்துக்களுக்காக ரூபா 377,600 போடப்பட்டதால் கிடைக்கவேண்டிய நிலுவை என காட்டப்பட்டு வருவதால் இதனை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சபை அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஆளனியினர் விபரம் பின்வருமாறு

| | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | நிரப்ப வேண்டிய ஆளணி |
|---|---|---|---|
| பதவி நிலையினர் | 04 | 04 | - |
| மூன்றாம் நிலையினர் | 01 | 01 | - |
| இரண்டாம் நிலையினர் | 52 | 51 | 01 |
| ஆரம்பத்தரம் | 96 | 91 | 05 |
| | 153 | 147 | 06 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) 1898, 01 ஆம் இலக்க ஓய்வூதிய சம்பள நிதிச்சட்டப்படி மற்றும் 1983 இலக்க 24 ஆம் இலக்க விதவைகள் அனாதைகள் மற்றும் தபுதாரர்கள் நிதி சட்டப்படி எல்லா அலுவலர்களுக்கும் விதவைகள் அனாதைகள் மற்றும் தபுதாரர்கள் நிதிக்கு செலுத்தப்படவேண்டிய போதும் சபையில் அதற்காக கடிதம் அனுப்பிய பின் இலக்கத்தினை பெற்று மாதாந்த பங்களிப்பு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொண்ட போதும் 73 அலுவலர் சம்மந்தமாக இலக்கம் எடுக்கப்படாமல் ரூபா 960,188 பங்களிப்புப் பணம் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) 2010 மே 26 ஆந் திகதியில் இலக்கம் 04/2010 ஆகிய ஓய்வூதிய சம்பள சுற்றறிக்கை 3 ஆம் பந்தியின் பிரகாரம் தற்காலிக, ஒப்பந்த, நாளாந்த அடிப்படையிலான ஓய்வூதியம் இல்லாத ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு கொடுக்க வேண்டியிருந்த போதும் 2014 வருடத்தில் யூலை மாதத்தில் இருந்து 2015 வரைக்கும் சபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கிளினிக் காப்பாளர் ஐவருக்கு ரூபா 270,000 சம்பளம் வழங்கிய போதும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கட்டளைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) சபை எல்லைக்குள் உள்ள குப்பைகள் எடுப்பதற்கு தனியார் கம்பனியுடன் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதும் அவ் ஒப்பந்தத்தில் போதுமான நிபந்தனைகள் இல்லாதிருந்தது. மீளாய்வாண்டில் சபையினால் குப்பைகள் அகற்றுவதற்காக ரூபா 13.9 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றி 2011 யூலை 5 ஆந் திகதி இலக்கம் 1713/11 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட சுற்றறிக்கை IV (அ) பிரிவு திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக உபபிரிவு 22 வது பந்தியின் பிரகாரம் கூறப்பட்ட செயற்பாடுகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பாக சபையினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

(ஊ) சொத்து முகாமைத்துவம்

(எ) இருப்புக் கட்டுப்பாடு